# பரிசுத்த பவுல் தமிழ் திருச்சபை

## அஹமதி - குவைத்

பொல்லாப்பு
உனக்கு நேரிடாது,

**வாதை**

உன் கூடாரத்தை அணுகாது.

சங்கீதம்
91:10



**செய்தி மலர்**

ஜூன் மாதம்
2025

இதழ் : 01
மலர் : 22

# முதன்மை ஊழியரிடமிருந்து...



கர்த்தருக்குள் பிரியமானவர்களுக்கு இயேசு கிறிஸ்து வின் நாமத்தில் ஆசீரும் வாழ்த்துகளும் உண்டாவதாக. இம்மட்டும் நம்மையும் நம் குடும்பத்தையும் நம் சபையையும் பாதுகாத்து நடத்தும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். இம்மூன்று மாதங்கள் வெப்பம் அதிகமாக இருக்கும்: வெப்பத்தால் பெலவீனங்கள் ஏற்படாதபடி கர்த்தர் எல்லோரையும் காத்துக் கொள்ள ஜெபிப்போம். புதிய ஊழி யப் பொறுப்பாளர்கள் சபையின் எல்லா ஆராதனைகளிலும் கலந்து கொள்ளவும் ஊழியங்களை கர்த்தரின் நாமம் மகிமைப்படும்படி இணைந்து செய்யவும் ஜெபிப்போம்.

இந்த மாதத்தில் நடக்கவிருக்கும் ஆராதனைகள், ஜெபக்கூடுகைகள், ஊழியங்கள் யாவும் கர்த்தரின் நாமம் மகிமைப்படும்படி பரிசுத்த ஆவியானவர் முன்னின்று நடத்தித்தர ஜெபிப்போம். எல்லா ஆராதனைகளிலும் ஜெபக்கூடுகைகளிலும் எல்லோரும் கலந்து கொள்ளவும் ஜெபிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**"எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப் படுத்தும்"** (சங். 90:17) என்று மோசே ஜெபித்தார். காரணம்: எந்த கானானை அடையவேண்டும் என்று இஸ்ரவேலர்கள் பிரயாணப்பட்டார்களோ அதை அடைய 40 ஆண்டுகள் பயணப்பட நேரிட்டது. அப்பொழுதுதான் மோசே மேற் குறிப்பிட்ட விண்ணப்பத்தை தேவனை நோக்கி ஏறெடுத்தார். அப்பொழுது கர்த்தர் அவர்களுக்கு வாக்குப்பண்ணினார்,

**"என் கண்களில் உனக்கு கிருபை கிடைத்தது"** (யாத். 33:17) என்று. இதற்கு பின்புதான் இஸ்ரவேலர்கள் கானான் தேசத்தை சுதந்தரித்துக் கொண்டார்கள். நம்முடைய தனிப்பட்ட அல்லது குடும்பத்தில் தடைபட்ட எந்த காரியமாக இருந்தாலும் நாம் கர்த்தரை நோக்கி முறையிடும்போது அதை தொடங்கவும் வெற்றியோடு முடிக்கவும் கர்த்தர் கிருபை செய்வார்.

தாவீது வாழ்ந்த பட்டணம் அக்கினியால் சுட்டெறிக்கப்பட்டது. மனைவிகளும் பிள்ளைகளும் அவனைச் சார்ந்தவர்களின் குடும்பங்களும் சிறைபிடிக்கப்பட்டார்கள்: தாவீதும் அவனோடு இருந்தவர்களும் விரக்தியடைந்து பெலனற்ற நிலையில் இருந்தனர் (1சாமு. 30:4-5), தாவீது கர்த்தரை நோக்கி முறையிட்டபோது, கர்த்தர் தாவீதைப் பார்த்துச் சொன்னார் **"அதை நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிக் கொள்வாய் என்றார்"** (1சாமு. 30:8). **"எல்லாவற்றையும் தாவீது திருப்பிக் கொண்டான்"** (1சாமு. 30:19) என்று வேதம் சாட்சி சொல்கிறது.

தேவனுக்குப் பிரியமானவர்களே, நீங்கள் தொடங்கினதை முடிக்க முடியவில்லையா! உபத்திரங்கள் நேரிடுகிறதா! சோர்ந்து போகிறீர்களா! ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள, சுகத்தை பெற்றுக் கொள்ள... தடைகள் காணப்படுகிறதா! அல்லது வாழ்க்கையில் உயர்வை இழந்தநிலையோ! செல்வங்களை இழந்தநிலையோ! சுகத்தை இழந்தநிலையோ! உறவுகளை இழந்தநிலையோ! எதுவாக இருந்தாலும் நம் கர்த்தரை நோக்கி முறையிடும்போது எல்லாவற்றையும் நாமும் தாவீதைப் போல திரும்ப பெற்றுக் கொள்ளுவோம். **"கர்த்தர் உங்களுக்காக (எனக்காக) யாவையும் செய்து முடிப்பார்"** (சங். 138:8) என்ற விசுவாசத்தில் ஜெயமெடுப்போம். கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரோடும் கூட இருப்பாராக. நம்மேல் கிருபையுள்ள தேவனுக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்.

**கர்த்தர் கிருபையில்**

**சகோ. ஆரோக்கியதாஸ். P**

# உன்னதர் மறைவினிலே

நீர் தண்ணீர் கேட்டாலே
திராட்சை ரசமாய் மாறிவிடும்
செங்கடலும் நீர் சொன்னால்
வெட்டாந்தரையாய் பாதை விடும்
அப்பம் உனைக் கேட்க
அப்பா உனை அழைத்தேன்
உம் சமூகம் தேடி வந்து
பாதத்தில் நான் அமர்ந்தேன்
பரிசுத்த பூமியில் பாவியாய் வாழ்ந்துவிட்டேன்
பாவி எனை ஏற்று பாவமதை கழுவுமையா
பாதையில் போனாலே அது வாதையாய் மாறுதையா
பாசம் என்றதெல்லாம் வேஷம் என்று ஆனதையா
துணைக்கென்று யாரும் இல்லை துன்பம் வந்த வேளையிலே
என் துயரம் போக்கிடவே யாரும் இல்லை இவ்வுலகினிலே
உலகம் பொய்யாகும் இன்ப உறவும் பொய்யாகும்
உன்னதர் மறைவினிலே உன் அன்பின் ஊற்றினிலே
உனக்காய் வாழ்கின்ற ஒரு வாழ்வு போதுமையா.
உந்தன் மறைவினிலே............ஆமென்

**அன்பு சகோதரி**
**K.வனிதா**

---

**கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு !**

**தாங்கள் இந்திய தேச மிஷினரிகளை தாங்கும் ஊழியத்திற்கு பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. தாஸ்கருணா அவர்களிடத்திலும்,**

**திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால் தங்களது காணிக்கைகளை சகோ. ஜெய சாம் டேனியல் அவர்களிடத்திலும்,**

**போக்குவரத்து ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. கிரன் அவர்களிடத்திலும்,**

**ஆலயம் கட்டுமான ஊழியத்திற்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. சாம் ஆனந்த் அவர்களிடத்திலும் கொடுத்து, ஊழியத்தை தாங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.**

# அற்பமானதை அற்புதமாய் மாற்றும் தேவன்

ரோமர்கள் காலத்தில் சிலுவை அற்பமாய் எண்ணப்பட்டது. அடிமையின் சின்னமாய் எண்ணப்பட்டது. கல்வாரியில் இயேசுவின் கரங்கள் அதன் மேல் பட்டவுடன் மகிமையின் சின்னமாய் மாறினது. இன்று பார்போற்றும் சிலுவையாய் திகழ்கிறது.

சாலையின் ஓரத்தில் கிடந்த கரிக்குச்சி அங்கு வந்த ஓவியனின் கையில் சிக்கியது. அதை எடுத்து வெள்ளைச் சுவரில் ஓவியம் வரைந்தான். அந்த ஓவியத்தைக்கண்டு ஊரே வியந்து நின்றது. அற்பமாய் எண்ணப்பட்ட மனிதர்கள் தேவனுடைய கையில் தங்களை அர்ப்பணிக்கும் போது தேவன் அவர்களை அற்புதங்களாய் மாற்றுகிறார்.

சகோதரனே! சகோதரியே! உன்னுடைய திறமையோ, ஞானமோ, பெலனோ, செல்வமோ முக்கியமல்ல. நீ யாருடைய கையில் இருக்கிறாய் என்பதுதான் முக்கியம். நீ உலக சிற்றின்பங்களில், மாயையில், ஐசுவரியத்தில் மதி மயங்கி தவிக்கிறாயா! உனக்காய் தன்னையே சிலுவையில் அர்ப்பணித்த இயேசுவின் கையில் உன்னை ஒப்புக்கொடு. அப்பொழுது இயேசு உன்னை பொன்னாக விளங்கச் செய்வார். மண்ணை மனிதனாக மாற்றினவர்: வார்த்தையால் அகிலத்தையும் சிருஷ்டித்தவர் அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும்.

**அடிமையாய் வந்தவன் அதிபதியானான்:-** யோசேப்பு ஒரு அடிமையாய் எகிப்து தேசத்திற்கு வந்தான். ஆனால் தேவன் அவனை அந்த தேசத்திற்கே அதிபதியாய் மாற்றினார். காரணம் தேவனுடைய கரத்தில் அடங்கி நடந்தான். போத்திபாரின் மனைவியின் இச்சையான கரங்களுக்கு தன்னை இரையாக்கிக் கொள்ள மறுத்தான். தேவனின் பரிசுத்த கரங்களுக்குள் பரிசுத்தமாய் வாழ தன்னை அர்ப்பணித்தான். சிறையிலும் பொறுமையாய் தேவ சித்தம் நிறைவேற காத்திருந்தான். மனிதர்கள் மறந்தாலும் என்னை மறவாத நேசர் ஒருவர் உண்டு என்று விசுவாசத்தோடு காத்திருந்தான். ஒருநாள் வந்தது... தேவ கரம் அவனை தூக்கி நிறுத்தினது. எகிப்து முழுவதுக்கும் அதிபதியாய் மாறினான். சகோதரனே! சகோதரியே! பாவம் நிறைந்த உலகில் பரிசுத்தமாய் வாழ உன்னை ஒப்புக்கொடுப்பாயா? பரிசுத்தமாய் வாழ தேவன் உன்னை அழைக்கிறார். அதுவே தேவ சித்தமாய் இருக்கிறது. ஜெபத்திலும், உபவாசத்திலும், பொறுமையிலும் தரித்து

நிற்பாயா? தேவ சித்தம் நிறைவேற காத்திரு. அவர் உன்னை உயர்த்துவார். ஆம், ஏற்ற வேளையில் உயர்த்துவார்.

**ஆடுகளை மேய்த்தவன் அரியணை ஏறினான்:-** ஆடுகளை மேய்த்துவந்த தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவானான். தகப்பனால் புறக்கணிக்கப்பட்டவன்: ஆகாதவனென்று சகோதரரால் தள்ளப்பட்டவன். இஸ்ரவேல் தேசத்திற்கு ஒரு மூலைக்கல்லாக தேவன் அவனை உயர்த்தினார். காரணம்: துதி பலிகளை அங்கீகரிக்கும் தேவ கரத்திற்குள் தன்னை அர்ப்பணித்தான். தேவனை துதிப்பதில் தாவீது யாருக்கும் சளைத்தவன் அல்ல. சவுல் துரத்தினாலும், அப்சலோம் துரத்தினாலும் அவன் வாயிலிருந்து அலறல் வரவில்லை. மாறாக சங்கீதங்கள் பிறந்தது. காடுகளும் குகைகளும் இசைக்கருவியின் ஓசையால் நிறைந்தது. அவன் இசைக்கும் இசையின் சப்தம் கேட்டு பிசாசுகளும் நடுநடுங்கின. துதிகளின் மத்தியில் வாசம் செய்யும் தேவன் இருக்கும் போது பிசாசுகள் எப்படி அங்கு இருக்க முடியும்? துதிகளால் தேவனை உயர்த்தினான் தாவீது. பாவச் சேற்றில் வீழ்ந்தபோதும் தேவனுடைய மன்னிப்பை பெற்றான். தேவ கரம் தாவீதை தாங்கினது. ஏற்ற வேளையில் தேவன் அவனை உயர்த்தினார். உன்னுடைய வாழ்க்கையில் பிரச்சனைகள் போராட்டங்கள் உன்னை துரத்துகிறதா? தாவீதைப் போல துதித்துப்பார் தேவன் உன்னை உயர்த்துவார்.

**மீன்களைப் பிடிக்கிறவன் போதகனாய் உயர்ந்தான்:-** மீன்களை பிடித்த பேதுரு தேவ அழைப்பை ஏற்று வலைகளை விட்டுச் சென்றான். மனிதர்களைப் பிடிக்கின்ற போதகனாய் தேவன் அவனை உயர்த்தினார். சாதாரண மீன்பிடிக்கும் பணியை செய்தவன் அசாதரண போதகப் பணிக்கு தன்னை அர்ப்பணித்தான். மறுதலித்தாலும் மனங்கசந்து அழுதான். மனந்திரும்பி தேவ கரத்தில் தன்னை அர்ப்பணித்தான். அலையில் அமிழ்ந்தாலும் தேவனை நோக்கி அபயமிட அறிந்திருந்தான். வலைகள் ஏமாற்றினாலும் தேவ வார்த்தை ஒருக்காலும் ஏமாற்றாது என அறிந்து கொண்டான். தேவ வசனங்கள் என்னும் வலைகளை வீசி மனிதர்களை பிடிக்கிற போதகனாய் மாறினான். பேதுருவின் பிரசங்கம் மூவாயிரம் பேரை பரலோகத்தில் சேர்த்தது (அப். 2:41). ஐயாயிரம் பேர் விசுவாசித்தார்கள் (அப். 4:4). பேதுரு தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து தேவ கரத்தில் அர்ப் பணித்தான். உன்னத பணிக்கு தேவன் அவனை உயர்த்தினார்.

மார்த்தாளுக்கு கவலைகள் மேல் கவலை. காரணம்: அவள் உலக வலைகளில் சிக்கித்தவித்தாள். மரியாளோ தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டாள். நீ மாய உலக வலையில் சிக்கித்தவிக்கிறாயா? உதரி தள்ளிவிட்டு கல்வாரியில் உனக்காய் காயமடைந்த இயேசுவின்

கரங்களைப் பற்றிக்கொள். தேவன் உன்னை உயர்த்துவார். கரித்துண்டாய் விளங்கும் உன் வாழ்க்கையை பலரும் வியக்கும் அழகிய ஓவியமாய் மாற்றுவார். அர்ப்பணித்துப்பார் அதிசயங்களை காண்பாய் பெலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல தேவனுடைய ஆவியினாலே ஆகும். ஆமென்.

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்
J. கிறிஸ்டோபர் தேவராஜ்

# இயேசுவின் ஜெப வாழ்வு

பரலோகத்தில் தேவனோடு தேவனுக்கு சமமாக இருந்த இயேசு கிறிஸ்து பூலோகத்திலிருக்கையில் தம்முடைய பிதாவை நோக்கி ஜெபம் பண்ணுகிற வராக காணப்பட்டார். அவர் மனித ரூபம் கொண்டிருந்தமையால் மனுஷரூபமாய் அவர் ஜெபிக்க வேண்டிய தேவையிருந்தது. அத்துடன் நமக்கு எல்லாவற்றிலும் முன்மாதிரியை காண்பித்த இயேசு ஜெபத்திலும் முன்மாதிரியை வைத்துப்போனார். 1-பேது_2:21 கிறிஸ்துவும் உங்களுக் காகப் பாடுபட்டு நீங்கள் தம் முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்து போனார். தன்னுடைய வாழ்வில் இயேசு கிறிஸ்து எப்படி நமக்கு முன்மாதிரியை வைத்துப் போனார் என்பதை அறிய அவர் ஜெபித்தின் தொடர்பான வசவனங்களை பார்க்கலாம்.

1.சாயங்காலத்தில் ஜெபித்தார்: மத்_14:23 அவர் ஜனங்களை அனுப்பி விட்ட பின்பு தனித்து ஜெபம் பண்ண ஒரு மலையின் மேல் ஏறி சாயங்காலமான போது அங்கே தனிமையாயிருந்தார்.
2. அதிகாலையில் இருட்டோடே ஜெபித்தார்: மாற்கு_1:35 அவர் அதி காலையில் இருட்டோடே எழுந்து புறப்பட்டு வனாந்திரமான ஓரிடத்திற்குப்போய் ஜெபம் பண்ணினார்.
3.இரவு முழுவதும் ஜெபித்தார்: லூக்_6:2 அந்நாட்களிலே அவர் ஜெபம் பண்ணும்படி ஒரு மலையின் மேல் ஏறி இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்.
4.மலையின் மேல் ஏறி ஜெபித்தார்: மாற்கு_6:46 அவர் ஜனங்களை அனுப்பிவிட்ட பின்பு; ஜெபம் பண்ணும்படி ஒரு மலையின் மேல் ஏறினார்.

5.வனாந்தரத்தில் தனிமையாய் ஜெபித்தார்: லூக்.5:16 அவரோ வனாந்தரத்தில் தனித்துப்போய் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார்.

6.சீஷரோடு சேர்ந்து ஜெபித்தார்: லூக்.9:18 பின்பு அவர் தமது சீஷரோடு கூடத் தனித்து ஜெபம் பண்ணிக்கொண்டு இருக்கையில்; அவர்களை நோக்கி ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார்.

7.ஊக்கமாய் ஜெபித்தார்: லூக்.22:44 அவர் மிகவும் வியாகுலப் பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந் துளிகளாய் தரையிலே விழுந்தது.

8.ஒரு குறிப்புக்காக மீண்டும் மீண்டும் ஜெபித்தார்: மத்.26:44 அவர் மறுபடியும் அவர்களை விட்டுபோய் மூன்றாந்தரமும் அந்த வார்த்தைகளையே சொல்லி ஜெபம் பண்ணினார்.

9.முகங்குப்புற விழுந்து ஜெபித்தார்: மத்.26:39 சற்று அப்புறம் போய் முகங்குப்புற விழுந்து என் பிதாவே; இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும் ஆகிலும் என் சித்தத்தின் படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார்.

10.உரத்த சத்தமாய் கண்ணீருடன் ஜெபித்தார்: எபி.5:7 அவர் மாம்சத்திலிருந்த நாட்களில் தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி; பலத்த சத்தத்தோடும்; கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி வேண்டுதல் செய்து தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு; ஜெபம் என்பது நம்முடைய வாழ்க்கையில் மிகவும் முக்கியமானதாக காணப்படுகிறது. நாமும் நம்முடைய வாழ்க்கையில் கடைப்பிடிப்போம்.

சகோதரி.டெய்சி எபினேசர்

## கர்த்தருடைய கரத்திலிருந்த வாலிபன்

பிரியமானவர்களே வாலிப வயது என்பது மிகவும் முக்கியமான ஒரு பருவம் காரணம் என்னவென்றால் சரிரத்திலும் பெலன் மிகுதியாய் காணப்படும். வாலிபர்களை எப்படியாவது தனக்கு சொந்தமாக்கிகொள்ள வேண்டும்என்றுதேவனும்(கர்த்தர்)விரும்புகிறார்சாத்தானும்விரும்புகிறான். மிகவும் வேதனைக்குறிய காரியம் என்னவென்றால் இன்றைக்கு உள்ள அதிகபடியான வாலிபர்கள் சாத்தானின் கரங்களில் உள்ளனர். இதற்கு காரணம் என்னவென்றால் மாம்ச இச்சை; தாங்கள் கேட்ட வசனத்தின்படி

வாழாமல் தங்களுக்கு பிரியனபடி வாழ்கிறார்கள். தேவனு டைய வார்த்தை இப்படியாக சொல்லுகிறது சங்கீதம் 119:9 - வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால்தானே.

இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராய் ஏற்றுக் கொண்டேன் என்று சொல்லுகிற ஒவ்வொரு வாலிபர்களும் அவர் சென்ன வார்த்தையிலே நிலைத்திருக்க வேண்டும். பவுல் வாலிபனான தீமோத்தேயுவுக்கு சொல்கிறார். 1 தீமோத்தேயு 4 :12 உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும்; நடக்கையிலும்; அன்பிலும்; ஆவியிலும்; விசுவாசத்திலும்; கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு. 2 தீமோத்தேயு 2:22 - அன்றியும் பாலியத்துக்குறிய இச்சைகளுக்கு நீ விலகியோடி சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு. கிறிஸ்துவுக்குப் பிரியமானவர்களே வாலிபப்பருவம் எந்த அளவிற்கு தேவனுக்கு பிரியம் என்பதை வேத வசனத்தின் வாயிலாக நாம் இப்பொழுது அறிந்து கொண்டோம்.

தேவ சமுகத்தைவிட்டு நீங்காத வாலிபன்: தன் விருப்பத்தின்படி வாழ்ந்து கொண்டிருந்த வாலிபர்களின் மத்தில் கர்த்தருடை சமூகத்தைவிட்டு நீங்காமல் அவரையே பேசுவதுபோல கர்த்தர் மோசேயோடு முகமுகமாய்ப் பேசினார்.பின்புஅவன்பாளயத்துக்குத்திரும்பினான். நூனின்குமாரனாகிய யோசுவாஎன்னும்அவனுடையபணிவிடைக்காரனாகியவாலிபன்ஆசரிப்புக் கூடாரத்தை விட்டுப் பிரியாதிருந்தான்.

தேவ ஆவியை பெற்ற வாலிபன்: அநேக வாலிபர்கள் அசுத்த பிடியில் இருந்தபோது யோசுவா என்னும் வாலிபன் தேவ ஆவியில் நிறைந்தவனாய் வாழ்ந்தான். வசனம் சொல்கிறது; எண்ணாகமம் - 27: 18 கர்த்தர் மோசேயை நோக்கி: ஆவியைப் பெற்றிருக்கிற புருஷனாகிய யோசுவா என்னும் நூனின் குமாரனை நீ தெரிந்து கொண்டு அவன் மேல் உன் கையை வைத்து அவன் தேவ ஆவியை பெற்றதினால் சபையார் அவனுக்கு கீழ்படியும்படியான கனத்தை கொடுத்தார்

வசனம் சொல்கிறது எண்ணாகமம் - 27: 20 இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் அவனுக்குக் கீழ்ப்படியும் படிக்கு உன் கனத்தில்

தொடர்ச்சி 17-ம் பக்கம்

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

" உன் பேரை பெருமைப்படுத்துவேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் ( ஆதி –12:2 ) "

சகோ.ஜான் கெஸ்டன்
செல்வி.ஜெஸ்லி டேனியேல்
செல்வன் வெங்கடேஷ் ராஜன்
சகோதரி.அனிதா ஆரோக்கியதாஸ்
சகோ.ராபின்ராஜ் ஹெலன் ஷீஜா
செல்வி.ஆஷ்லின் கெத்சியா
சகோ.ஜான்போஸ்கோ
சகோ.ஜெஸ்டின்
செல்வன்.கிங்ஸ்டன் ஐசக் ரிச்சர்ட்சன்
செல்வன்.ரேயான் சத்தீஷ்குமார்
சகோ.பிரசாத் சுந்தரேசன்
சகோதரி.ஜெகதாம்பாள் ராஜவேல்
சகோதரி.நிர்மலா யேசுதாஸ்
சகோ.ஞான விஜயன்
சகோதரி.அனிதா ஜெஸ்டின்
செல்வன்.சாமுவேல் சோபர்ஸ் ஸ்டாலின்
சகோ.வெங்கடேஷ் ஜெபராஜ்
சகோ.A.ஆரோக்கியதாஸ்
சகோதரி.நித்யா ரோஸ் ஜோன்ஸ்
சகோ.கிரன்குமார்
சகோதரி.டெய்சி எபினேசர்
செல்வன் ஷெர்வின் டைட்டஸ் சிவகுமார்
சகோ.வினோத்
சகோதரி.பிரமிளா சந்தோஷ்குமார்
சகோ.பக்தராஜ்
செல்வன் ஆகாஷ் பாலமுருகன்
செல்வன் ஜோஸ்வா ஜான்சன்
சகோதரி.ஷீபா பிரசாத்
செல்வி.எபிஷா ஜோன் எபினேசர்
செல்வி. வனிதா
செல்வி.ரேஷ்மா அசோக்குமார்
செல்வி நோயல் யோவா தாமஸ்
சகோதரி.பிரமிதா ரூத் பிரிகிதா
சகோதரி.பாக்யா ரவி ஜான்
செல்வி.ஜெய்னி டேனியேல்
செல்வி.கிரேஸ்லின் பிராங்கிளின்
செல்வன் கவின் ஆண்டனி
சகோ.M.கிறிஸ்டோபர்
செல்வன் டால்டன் விபின்
சகோ.ஜஸ்டின்







## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்




திருமதி.திரு பால்ஜெகநாதன்–பியூலா
திருமதி.திரு சத்தீஷ்குமார் எத்திராஜ்–சசிரேகா
திருமதி.திரு யேசுதாஸ் ஆரோக்கியதாஸ்–நிர்மலா
திருமதி.திரு டேவிட் ஜெயக்குமார்–செலின்
திருமதி.திரு ஜெரேமியா–நித்யா
திருமதி.திரு மகேஷ்ராஜ்–ஜீவரத்தினம்
திரு.திருமதி.சங்கீதா–ராஜ்
திருமதி.திரு.வினோத்–பரதீபா ஷெரினா



# ஜுன் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/6/2025 | Sis. ஜீனா சதீஸ் | Sis. பியூலா மெர்சி பால் |
| 8/6/2025 | சகோ.தாஸ் கருணா | சகோ. ஜாண்சன் |
| 15/6/2025 | Sis. ஷீபா பிரசாத் | Sis. தயா யேசுரத்தினம் |
| 22/6/2025 | சகோ. குணா | சகோ. சாம் ஆனந்த் |
| 29/6/2025 | Sis.டெய்ஸி எபினேசர் | Sis. ஹெப்சிபா ஸ்டீபன் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/6/2025 | சகோ. பிராங்கிளின் | சகோ. ரவி ஜான் பீட்டர் |
| 13/6/2025 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 20/6/2025 | சகோ.M. கிறிஸ்டோபர் | சகோ. ஸ்டாலின் |
| 27-ஜுன்-25 | சகோ. ஆரோக்கிய ராஜ் | சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ் |

## ஆராதனை ஒழுங்குகள்

**7/6/2025 சனிக்கிழமை – அன்று முழு உபவாச ஜெப கூடுகை**
இடம் – பாஹாகீல் ஜெப வீடு – நேரம்– காலை 10:00 முதல் 1:00 மணிவரை

**12/6/2025 வியாழன் அன்று முழு இரவு ஜெபம்**
இடம் – பாஹாகீல் ஜெப வீடு – நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

**14/6/2025 சனிக்கிழமை – அன்று சகோதரிகள் ஐக்கியக் கூடுகை**
இடம் – பாஹாகீல் ஜெப வீடு – நேரம் –6:30 PM– 8:30 வேத வினா பகுதி – II கொரிந்தியர்

**27/6/2025 வெள்ளி அன்று வாலிபர் ஐக்கியக் கூடுகை**
இடம் – பாஹாகீல் ஜெப வீடு – நேரம் - 6:30 PM-8:15
வேத வினா பகுதி – மத்தேயு

**செவ்வாய் கிழமை**
குடும்ப ஆசீர்வாத ஜெபக்கூடுகை
இடம் – பாஹாகீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

**வியாழக்கிழமை**
பாடல் பயிற்சி
இடம் – பாஹாகீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

**சனிக்கிழமை**
சிறுவர் வேதாகமப் பள்ளி
இடம் – பாஹாகீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 3:30 முதல் 5:00 வரை

**திங்கட்கிழமை**
பெண்கள் ஐக்கியக் ஜெப கூடுகை
இடம் – பாஹாகீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:00 முதல் 7:00 வரை

# ஜீன் மாதத்திற்கான வேத வினா!

**கீழ்க் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1. நிலத்தை விற்று கிரயத்தை அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்தவர்கள் யார் யார் ?
2. பேதுரு முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணின போது உயிரோடே எழுந்தது யார் ?
3. என்ன செய்த போது கூடியிருந்த இடம் அசைந்தது?
4. எப்பொழுது தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தவன் யார் ?
5. பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளும்படி சமாரியர்களுக்காக ஜெபம் பண்ணினது யார் ?
6. பெரோயா பட்டணத்தார் தினந்தோறும் எதை ஆராய்ந்து பார்த்ததினால் நற்குணசாலிகளாயிருந்தார்கள் ?
7. பிலிப்பி பட்டணத்தில் எதனருகே வழக்கமாய் ஜெபம் பண்ணுகிற இடம் இருந்தது?
8. எவைகள் தேவசந்நிதியில் வந்து எட்டியது?
9. என்ன செய்து கொண்டிருந்த போது பேதுரு ஞானதிருஷ்டியடைந்தான்?
10. எருசலேமில் மேல்வீட்டில் கூடினவர்கள் ஒருமனப்பட்டு எவற்றில் தரித்திருந்தார்கள்?
11. எந்த வேளையில் பேதுருவும் யோவானும் தேவாலயத்துக்குப் போனார்கள்?
12. நேர்த்தெருவில் யார் வீட்டில் சவுல் ஜெபம் பண்ணிக் கொண்டு இருந்தான்?
13. முழங்காற்படியிட்டு மிகுந்த சத்தமிட்டு நித்திரையடைந்தவன் யார்?
14. நடுராத்திரியில் பவுலும் சீலாவும் செய்தது என்ன?
15. பேதுருவுக்காக தேவனை நோக்கி ஊக்கத் தோடே ஜெபம் பண்ணினது யார்?

குறிப்பு:- விடைகளை வருகின்ற 20-06-2025 க்குள் சபையின் செயலாளரிடமோ (66159784) அல்லது செய்திமலர் பொறுப்பாளரிடமோ (+91 7305651625) கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை அப்போஸ்தலர் புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும் .

(கேள்வி மற்றும் அன்பளிப்பு சகோதரர் கிறிஸ்டோபர் தேவராஜ் குடும்பம்)

**...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; - மத்தேயு 7:7**


## மே மாத வேத வினாவுக்கு விடை

1. இடித்து பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெய்யில் – லேவி 24:2
2. அந்நிய அக்கினியை கர்த்தருடைய சந்நிதிக்கு கொண்டுவந்தினால் – லேவி 10: 1–2
3. யூபிலி வருஷம் – லேவி 25 : 11
4. இரத்தத்தில் இருக்கிறது – லேவி 17:11
5. எளியவனுக்கும் பரதேசிக்கும் அவைகளை விட்டுவிட வேண்டும் – லேவி 23:22
6. விரிகுளம்புள்ளதாயிருந்து . குளம்புகள் அசைபோடுகிறதுமானவை – லேவி 11:3
7. ஏழு நள் – லேவி 8:33
8. முதலாம் மாதம் பதினாலாம் தேதி – லேவி 23:5
9. இரண்டு காட்டுப்புறாக்களையாவது . இரண்டு புறா குஞ்சுகளையாவது –லேவி 5:7
10. கொலை செய்யப்படவேண்டும் – லேவி 20:27
11. ஊரிம். தும்மீம் – லேவி 8:8
12. அந்நியரை – லேவி 19:33
13. உப்பினால் – லேவி 2:13
14. ஒரு எப்பா அளவான மெல்லிய மாவிலே பத்தில் ஒரு பங்கு – லேவி 6:20
15. போஜன பலியில் மீதியானது – லேவி 2:9

## எப்ரல் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

| | |
|---|---|
| Sis.வனிதா | Sis. பியூலா மெர்சி பால் |
| Sis.நகோமி ஜாண்சன் | Sis. நித்யா ஜோன்ஸ் |
| Sis. ஜீனா சதீஸ்குமார் | Sis. சாந்தி |
| Sis. பத்மினி வர்க்கீஸ் | Sis. சுபா ஸ்டீபன் |
| Sis. ஜெஸ்லட் | Sis. தயா இயேசுரத்தினம் |
| Sis.சுகந்தி தம்புக்குமார் | Bro. ஜாண்சன் |
| Sis.ஜான்சி ராணி | Bro. பக்தராஜ் |
| Sis.மரிய குளோரி தாஸ் | Sis. விக்டோரியா ராஜன் |

வேத வினா பதில் எழுதிய உங்கள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகள்



# June Month Quiz for Children



<u>(Write the answers using the New King James Version. Children those who are studying above SECOND Standard can participate)</u>

1. Who is Mother of Jesus?
2. John was preaching a baptism of__________
3. Why did jesus become angry and was grieved ?
4. For whom ther is no forgiveness? who commited such crime? how?
5. How many parables were told by Jesus in these chapters? What are they (Tittle only?)
6. How many times "Twelve" is repeated in these five chapters? where?
7. What are seeds, birds of air scorched by sun, thorms and good ground compared to in the parable?.
8. How many specific miracles were done by Jesus in these five chapters? What are they (Titles Only)
9. Why did Jesus rise in the morning long before day light? Where did he go?
10. Why Did the Pharisees plot to destroy Jesus?.

Note:- ANSWERS can be taken from Mark Chapter : 1 - 5 Submit your answers to the Sunday School Teachers on or before 25.06.2025. Please mention the reference along with the answers.

## Answer for the children Quiz May

1. To impart some spiritual gift, To establish them & To be mutually encouraged (comforted) by each other's faith. – Rom. 1:10-13
2. If he is one inwardly. – Rom. 2:28-29
3. Righteous – Rom. 3:10
4. Through the law – Rom. 3:20
5. His own body, His age & The deadness of Sarah's womb. – Rom. 4:19
6. Baptism – Rom. 6:4
7. Exceeding sinful – Rom. 7:13
8. Them which are in Christ Jesus, Those who walk not after the flesh & Those who walk after the spirit. – Rom. 8:1
9. Conquerors – Rom. 8:37
10. Because they sought it not by faith. – Rom. 9:31-32

## CHILDREN THOSE WHO WROTE QUIZ ANSWER

**1. Vincy Rani 2. Adriel Kemuel Dhas, 3. Andrea Magdalene Dhas**

# பிழைத்திரு



எசேக்_16:6 நான் உன் அருகே கடந்து போகும் போது மிதிக்கப்படுவதற்கு ஏதுவாய் நீ உன் இரத்தத்தில் கிடக்கிறதைக் கண்டு உன் இரத்தத்தில் கிடக்கிற உன்னை பார்த்து பிழைத்திரு என்றேன். ஆம் உன் இரத்தத்தில் கிடக்கிற உன்னைப் பார்த்து பிழைத்திரு என்று சொன்னேன் என்று நம் ஆண்டவராகிய கர்த்தர் கூறுகிறார்.

நம் தேவன் நம்மைப் பார்த்து பிழைத்திரு என்று சொன்னதால்தான் இன்று நாம் நிலைத்து நிற்கின்றோம். எசே_16:4_5 இப்படியாக சொல்கிறது ஒரு கண்ணும் உன் பேரில் இரக்கமாயிருந்ததில்லை என்று. ஆம் நாம் நம்முடைய வாழ்வில் எத்தனையோ போராட்டங்கள் பிரச்சனைகள் கண்ணீர் மத்தியில் வாழும் போது நம்முடன் இருக்கிறவர்களின் பல கண்கள் நம்மை காணும் ஆகிலும் அவைகளில் ஒன்றும் நம் பேரில் இரக்கமாயிருந்ததில்லை. இரக்கத்தில் ஐஸ்வரியவானாகிய நம் தேவனாகிய கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்ததினால் பாவத்தின் இரத்தத்தில் கிடந்த என்னைப் பார்த்து அவருடைய பரிசுத்த இரத்தத்தினால் மீட்டெடுத்து பிழைத்திரு என்றார்.

எசேக்_18:23 துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தர் சொல்லுகிறார். நீதிமான்களை மட்டுமல்ல துன்மார்க்கன் மேலேயும் அவர் எவ்வளவாய் அன்பு வைத்திருக்கிறார். அவன் சாவதில் அவருக்கு எவ்வளவேனும் பிரியமில்லை அவன் தன் பொல்லாத வழிகளைவிட்டு மனந்திரும்பி பிழைத்திருக்க வேண்டும் என்று விரும்புகிறார். நாம் எல்லோரும் மனந்திரும்ப வேண்டும் என்பதற்காக அவர் நம்மேல் நீடிய பொறுமையாய் இருக்கிறார். அவரை விசுவாசிக்கிற நாமும் இப்படிப்பட்ட பிரியத்தை எல்லோர் மேலும் வைத்திருக்கிறோமோ? இல்லை நமக்கு பிரியமில்லாத காரியங்களை செய்கிறதினால் பிறர் மீது கசப்பை வளர்க்கிறோமா என்று நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம்.

எசேக்_18:32 மனந்திரும்புங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள். சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். தேவன் நமக்கு கொடுத்த இந்த ஒரு

வாழ்க்கையை அவருடைய நாம மகிமைக்கென்று வாழாமல், உலகக் காரியங்களை கொண்டு துன்மார்க்கமாய் நடந்து பிறந்தோம் வாழ்ந்தோம். மரித்தோம் என்கிறவனுடைய சாவை அவர் விரும்புவதில்லை. யோபு22:23 இப்படியாக சொல்கிறது "சர்வ வல்லவரிடத்தில் மனந்திரும்பினால் திரும்பக்கட்டப்படுவீர் அக்கிர மத்தை உமது கூடாரத்துக்கு தூரமாக்குவீர் என்று வாசிக்கிறோம். எனவே நாம் தேவனிடத்தில் மனந்திரும்பும் போது திரும்பக்கட்டப்படுகிறோம். தேவன் நம்மை பிழைத்திருக்கச் செய்கிறார்.

"காலம் நிறைவேறிற்று; தேவனுடைய ராஜ்ஜியம் சமீபமாயிற்று மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள். மாற்1:15 ஆமென்...

**வாலிபம் இயேசுவுக்கே..**

## குயவன் கையில் களிமண்

மண்ணிலே உருவாக்கப்பட்ட மனிதன்
மண்ணுக்கே திரும்பும் முன்பாக
நம் வாழ்வில் மத்தியஸ்தராக
ஊடைந்த பாத்திரமென்றாலும்
அவர் ஒருவர் மட்டுமே நம்மை வெறுத்துவிடவில்லை
ஒன்றுக்கும் உதவாத நம்மை கண்ணோக்கிப பார்த்து
நல்ல குயவனாக வந்து – களிமண் போன்ற
நம் வாழ்வினை சிறப்பாக வனைந்து
அலங்கரிப்பவரும் அவர் மட்டுமே
போராட்டங்கள் பிரச்சனைகள் வந்தாலும்
கண்ணீரிலே மூழ்கினாலும்
நெருப்பில் வைக்கப்பட்ட பாத்திரங்கள் போலுள்ள
நம் வாழ்க்கைக்கு மெருகு ஊட்டி
நம்மை அழகு பார்ப்பவர் என் அருமை இயேசப்பா மட்டுமே
விலைபோகாத பாத்திரமாக நாம் இருந்தாலும்
விலையேறப் பெற்றவர்களாக நம்மை உருவாக்குபவர் நம் இயேசு

அவர் உள்ளங்கையில் நம்மை செதுக்கி வைத்துள்ளவரும் அவர் ஒருவர் மாத்திரமே
வேதத்தில் நாம் காணும் பாத்திரமெல்லாம்
இயேசுவை மட்டுமே போற்றிடுதே
ஊழிய பாதையிலும் வாழ்க்கைச் சக்கரத்தில்
சுழன்று தவிக்கும் வேளையிலே
நல்ல குயவனாக வந்து சிறந்த பாத்திரமாக
எம்மை உருவாக்கி உயர்த்திடுமே
எந்தன் வாழ்நாளெல்லாம் உம் பாதையில் நடத்திடுமே
உந்தனுக்கே உடைமை ஆக்கிடுமே
எம்மைத் தேடி வந்த தெய்வம் நீர் ஒருவரே
என்னைக்கரம் பிடித்து நடத்துபவரும் நீரே
உம் படைப்பின் நோக்கத்தை
எமக்கு உணரச் செய்து கோடா கோடியாக
எம்மை ஆசீர்வதித்து மகிழச் செய்பவரை
சிரம் தாழ்த்தி கரம் கூப்பி நன்றி செலுத்துகின்றேன்

– A . பியூலா மெர்ஸி பால்

9_ம் பக்கம் தொடர்ச்சி..

சபையார் எல்லாரும் அவனுக்குக் கீழ்ப்படியும்படிக்கு உன் கனத்தில் கொஞ்சம் அவனுக்கு கொடு.

தேவனை உத்தமாய் பின்பற்றின வாலிபன்: தேவன் சொல்கிறார் எண்ணாகமம் _ 32: 12 எகிப்திலிருந்து வந்தவர்களில் இருபது வயது முதல் அதற்கு மேற்பட்ட மனிதர்கள் ஒருவரும் என்னை உத்தமமாய்ப் பின்பற்றாதபடியால் தேவன் கொடுத்த சாட்சி : எண்ணாகமம் _ 32: 11 உத்தமமாய் என்னைப் பின்பற்றின கேனேசியனான எப்புன்னேயின் குமாரன் காலேபும்; நூனின் குமாரன் யோசுவாவும் தவிர..

கானானுக்குள் பிரவேசித்த வாலிபன்: கர்த்தரை உத்தமமாய் பின்பற்றினதினால் இந்த வாலிபர்கள் கானானுக்குள் பிரவேசித்தார்கள். மற்ற எல்லாரும் அதை இழந்துப்போனார்கள். வசனம் சொல்லுகிறது : உபாகமம் 1: 38 உனக்கு முன்பாக நிற்கிற நூனின் குமாரனாகிய யோசுவா அதில் பிரவேசிப்பான்.

யோசுவா என்னும் வாலிபனின் வாழ்க்கையை பார்க்கும் போது நாம் ஒரு காரியத்தை தெரிந்துக்கொள்ளலாம் என்னவென்றால் அவன் கர்த்தருடைய கையில் அடங்கியிருந்தான் என்று வசனம் சொல்கிறது சங்கீதம் 127: 4 வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

**–கிறிஸ்துவின் பணியில்**
ATC Youth Team
Be an example : 1 Timothy 4 : 12

எனக்கு பாதை காட்டியது உமது ஒளி
என்னை நடக்க வைத்தது உமது கரம்
என்னை துதிக்க வைத்தது உமது நேசம்
என்னை பாட வைத்தது உமது அன்பு
என்னை வளர்த்தது உமது கிருபை
எல்லாம் எனக்காக கல்வாரி சிலுவையின்
மரம் அதுவே என் இயேசு

\- சகோ.குணா

# Kids Corner

I thank You for the blessings
You give to me each day.
They fill my life with abundant joy
More than words can say!

I thank You for my growing faith
And the trials I've made it through.
I'm victorious and am made complete
Because of only You!

I thank You for the many times
You carry me through my strife.
I long for, with each passing day,
Your presence in my life!

I thank You for Your only Son
Who died and set me free.
I marvel at the fact that You
Think so much of me!

I thank You for Your tolerance
And a love that never ends.
How glad I am that You are both
My Savior and my Friend!

I thank You for the Holy Word
That's powerful and true!
It's the Plan You made and a gift
That keeps me close to You!

I thank You for Your gentleness
And desire to draw me near.
When You embrace me in Your arms
I lose all doubt and fear!

But most of all I thank You, Lord
Because You're God and King!
I'll praise You as pong as I live;
My heart will forever sing;

I Thank You, Lord!!!!!

## Memory Verses Portions

- Playschool LKG - Psalms 23
- UKG - Psalms 121
- Classes 1 - Psalms 121 & Psalms 150
- Classes 2,3,4 - Proverbs 15 (1-20)
- Classes 5,6,7 - Proverbs 15 (1-33)
- Classes 8 & Above - Proverbs 15 (1-33) & James 1 (1-12)

# கடந்த மாத நிகழ்வுள் சில

















# ஊழியம் செய்ய ஜெபியுங்கள்

# செயற்குழு உறுப்பினர்கள்

## முதன்மை ஊழியர்

Bro. ஆரோக்கியதாஸ்
Ph. 9987 0126

## செயலாளர்

Bro. ஆரோக்கியராஜ்
Ph.60918793

## பொருளாளர்

Bro. ஜாண்சன்
Ph.97610275

## பெண்கள் ஐக்கிய தலைவி

Sis. டெய்சி எபிநேசர்
Ph.60686612

## வாலிப ஐக்கிய தலைவர்

Bro. M. கிறிஸ்டோபர்
Ph.67096449

Church e-mail ID- ahmaditamil.kw@hotmail.com
Church Website Address - ahmaditamilchurch.com

Private Circulation Only

Church Postal Address
Your Name
PO.Box No: 46795,
Fahaheel, 64018,
Kuwait.